# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**11,729 — 1959 අප්‍රේල් 24 වැනි සිකුරාදා — 24.4.1959**

11,729 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு சித்திரை மாதம் 24 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (II) — விளம்பரங்கள்

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### நீர்ப்பாசன இலாகா

மாத்தளைப் பகுதியிலுள்ள நீர்ப்பாய்ச்சல் பொறியியலாளரின் வீடுகட்டுவதற்கு கேள்விப் பத்திரங்கள் 1959 ம் ஆண்டு மே மாதம் 6 ம் திகதி காலை 10.00 மணி வரைக்கும் கண்டி நீர்ப்பாய்ச்சல் பொறியியலாளரின் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள். 27.4.59 ல் இருந்து 5.5.59 வரைக்கும் இவ்விலாகாவில் 47,000.00 ரூபாய்க்கும் அதற்கு மேற்படவும் பதிவு செய்த ஒப்பந்தக்காரருக்கு மாத்தளை நீர்பபாய்ச்சல் இலாகாவில் வழங்கப்படும்.

மேலதிகமான விபரங்களை மாத்தளை நீர்ப்பாய்ச்சல் உபகந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

நீர்ப்பாய்ச்சல் இலாகா,
மாத்தளை.

சி. து. ரா. சிங்கம்,
டி. ஆர். ஓ., மாத்தளை.

---

### நீர்ப்பாசன இலாகா

கொழும்புப் பிரிவில், பனுகல ஸ்கீமிலுள்ள, மாஓவிற்ற றெகுலேற்றரின் கட்டுமான வேலைகளுக்காக, கேள்விப்பத்திரங்கள், இந்த டிப்பாட்மென்டில், பதிவு செய்யப்பட்ட அதாவது, ரூபா 40,000 க்கும் அதற்கும் மேலதிகமாகவும் பதிவு செய்யப்பட்டவர்களின முத்திரை அடிக்கப்பட்ட, ரெண்டர் நோட்டிஸ்கள், நீர்ப்பாசன இலாகா, மாகாண எஞ்சினியரால், கொழும்பு, கொட்டா ரோட்டிலுள்ள ஆபீசில், 1959 ம் ஆண்டு, வைகாசி மாதம், வெள்ளிக் கிழமை, 15 ந் திகதி, காலை, 11.30 மணி, வரையிற் பெற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் பத்திர போம்கள், கொப்பிகளுடன், கம்பக, அத்தனுகலுஓயா பிரிவு அதிகாரியின், கந்தோரில் பெற்றுக் கொள்ளலாம். பிளான்களைச் சோதனை செய்து, எல்லா விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திர போம்கள், 1959 ம் ஆண்டு, வைகாசி மாதம் 15 ந் திகதிவரையில், கந்தோர் நேரங்களில், கொடுக்கப்படும். பிரிவு அதிகாரியின் ஆபீசில், அல்லது கச்சேரியில், ரூபா. 50/— கட்டி பற்றுச் சீட்டுடனிருப்பவர்களுக்கே வழங்கப்படும்.

கவுண்மெண்டில் கொந்தருத்துச் செய்பவராயிருப்பதுடன் மேலதிகாரிகளிடமிருந்து, நற்சாட்சிப்பத்திரங்களையும், தாங்கள் செய்த வேலைகளுக்கு ஒப்பிப்பவர்களே ரெண்டேஸ்களைப் பெற்றுக் கொள்ள இடமுண்டு.

கவுண்மெண்டுக்கு, எந்த ரெண்டரையாவது, அல்லது எல்லாவற்றையுமாவது, ஏற்றுக்கொள்ளவோ தத்துவமுடையதானது.

மேலே சொல்லப்பட்ட விதிகளமைந்த, கேள்விப்பத்திரகாரருக்கு மாத்திரமே, பத்திரங்கள் வழங்கப்படும்.

ரீ. எல். எம். பாலதாச,
கீழ்ப்பிரிவு அதிகாரி,
அத்தனுகலுஓயா கீழ்ப்பிரிவு.

நீர்ப்பாசனக் கந்தோர், கம்பக,
1959 ம் ஞூ ஏப்ரல மீ 8 ந் உ.

---

### நீர்ப்பாசன இலாகா

அநுராதபுரத்திலுள்ள வடமத்திய பெரும்பகுதி நீர்ப்பாசன எஞ்சினியர் அவர்கள், ரூபா. 10,000 மேற்பட நீர்ப்பாசன இலாகாவில் பதியப்பட்ட விண்ணப்பக்காரர்களிடமிருந்து 40,000 கிடுகுகள் வாங்க, 1959 ம் ஆண்டு மே மாதம் 6 ந் திகதி காலை 11 மணிவரைக்கும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வார்.

2. விண்ணப்பங்கள் இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்பத்திரங்களை 1959 ம் ஆண்டு மே மாதம் 4 ந் திகதி வரைக்கும் பதவியாத்திட்ட நீர்ப்பாசன எஞ்சினியரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

3. வேறும் விபரங்கட்கு நீர்ப்பாசன எஞ்சினியர், பதவியாத்திட்டம், பதவியாச் சந்தி என்னும் விலாசத்திற்கு விண்ணப்பஞ் செய்யவும்.

சீ. சீ. ரீ. பர்னாந்து,
நீர்ப்பாசன எஞ்சினியர்.

பதவியாத்திட்டம், பதிவியாச் சந்தி,
1959 ம் ஞூ மார்ச் 24 ந் உ.

---

### உணவுப் பகுதி

1959 ம் ஆண்டு மே மாதம் 1 ந் திகதிக்கும், 1959 ம் ஆண்டு செம்ரெம்பர் மாதம் 30 ந் திகதிக்குமுள்ளான காலத்தில் கீழ்க்காணும் சேவைகள் புரிவதற்கான கோரிக்கைகள் விவசாய உணவு அமைச்சின் கோரிக்கைச் சபைத் தலைவரால், தபால் பெட்டி இலக்கம் 564, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 என்னும் விசாலத்தில் 1959 ம் ஆண்டு மே மாதம் 5 ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணி வரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும்.

**சேவை**

பிரதானமாக அரிசி, மா, சீனியைக் கொண்ட உணவுப்பொருட்களைக் கொழும்புத் துறைமுகத்திலுள்ள ஏற்றிறக்குமதி பண்ணும் செய்கரையிலிருந்து உணவு அதிகாரியின் பண்டசாலைகளான பூந்தோட்டம், வெள்ளவத்தை, மாளிகாவத்தை, கொலன்னாவை, பெப்பிலியாவ, மனிங் மார்க்கட், வியாங்கொடை முதலியவற்றிற்கு லொறிகள் மூலம் கொண்டு செல்லல்.

ஒரு மைலுக்குத் தொன் ஒன்றுக்கான தொகை மேற்கோள் செய்யப்படல் வேண்டும். பொதுவாக அரிசி 160 இருத்தல்கள் அடங்கிய மூடைகளாகவும், 224 ருத்தல்கள் அடங்கிய மூடைகளாகவும், மா 150 இருத்தல்கள் அடங்கிய மூடைகளாகவும் இருக்கும். வேண்டியுள்ளபடி குறைந்தது 15 லொறிகளைச் சொந்தமாக உடையவராகவும், அல்லது வாடகைக்கமர்த்தும் தாமுடையவராகவும், தம்வசமுள்ள போக்குவரத்து வசதிகளுடன் ஒப்பந்தத்தை நிவிர்த்தி பண்ணக்கூடிய நிலைமையில் உள்ளவர்களிடமிருந்து மட்டுமே கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1959 ம் ஆண்டு மே மாதம் 5 ந் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிவரைக்கும் யூனியன் பிளேஸ், கொழும்பு 2 ல் உள்ள உணவு அதிகாரியின் காரியாலயத்தில் பெறக்கூடிய விண்ணப்பப் பத்திரத்தில் (இரு பிரதிகளில்) விண்ணப்பம் செய்யப்படவேண்டும். உணவு அதிகாரியிடம் தங்குபணமாக ரூ. 100 கொடுத்துப் பெற்ற பற்றுச்சீட்டைக் காண்பித்தும், உணவு அதிகாரியின் காரியாலயத்தில் பெறக்கூடிய விபரங்கள் அடங்கிய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள அங்கம் 4 ன், 2 ம், 3 ம் பகுதிகளை நிவிர்த்தி செய்வதன் மூலமும் கோரிக்கைப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் தேவையான விபரங்களை உணவு அதிகாரியின் காரியாலயத்தில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

கே. எம். டீ. ஜயனெத்தி,
உணவு அதிகாரி.

உணவு அதிகாரியின் காரியாலயம்,
330, யூனியன் பிளேஸ், கொழும்பு 2,
1959 ம் ஞூ ஏப்ரில் மீ 21 ந் உ.

## வித்தியா பகுதி

### ஆசிரியரின் உபயோகத்துக்கான பாடப் புத்தகங்கள் விநியோகஞ் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள், 1958/59

ஆசிரியரின் உபயோகத்துக்கான பாடப் புத்தகங்களை விநியோகஞ் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் 1959 ம் ஆண்டு மே மாதம் 15 ந் திகதி, வெள்ளிக்கிழமை, பி. ப. 2.30 மணிவரை கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா பகுதி கேள்விப் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்களை அனுப்ப எண்ணுவோர் "வித்தியாதிபதி (விநியோகக் கிளை), வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு விண்ணப்பஞ் செய்து வேண்டிய விபரங்களை இலவசமாய்ப் பெற்றுக் ொள்ளலாம்.

3. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோரில் கொழும்பிலுள்ளவர்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலிலுள்ள வித்திய கந்தோரின் கணக்குக் கிளையிலும், கொழும்புக்கு வெளியேயுள்ளவர்கள் ஆங்காங்குள்ள கச்சேரியிலும் ரூ. 100 கட்டியதாகப் பற்றுச்சீட்டைக் காட்டி, 1959 ம் ஆண்டு மே மாதம் 14 ந் திகதிவரை சாதாரண வேலை நேரத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

எல். டீ. எஸ். கருணரத்ண,
வித்தியாதிபதிக்காக.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1959 ம் ஆண்டு எப்ரில் மீ 21 ந உ.

---

## வித்தியா பகுதி

### நடன உபகரணங்கள் விநியோகஞ் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள்—1958/59

நடன உபகரணங்கள் விநியோகஞ் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் வெள்ளிக்கிழமை 1959 ம் ஆண்டு மே மாதம் 15 ந் திகதி பி.ப. 2.30 மணிவரை கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா பகுதிக் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோர் "வித்தியாதிபதி (விநியோகக் கிளை), வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2," என்ற விலாசத்துக்கு விண்ணப்பஞ் செய்து வேண்டிய விபரங்களை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோரில் கொழும்பிலுள்ளவர்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா கந்தோரில் கணக்குக் கிளையிலும், கொழும்புக்கு வெளியேயுள்ளவர்கள் ஆங்காங்குள்ள கச்சேரியிலும் ரூ. 100 கட்டிய தாகப் பற்றுச்சீட்டைக் காட்டி, 1959 ம் ஆண்டு மே மாதம் 14 ந் திகதிவரை சாதாரண வேலை நேரத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

எல். டீ. எஸ். கருணரத்ண,
வித்தியாதிபதிக்காக.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1959 ம் ஆண்டு எப்ரில் மீ 21 ந உ.

---

## தபால் தந்திப் பகுதி

### தவறைக் குறிக்கும் மின்னணுப் பொறி (Electronic Fault Locator) (எலெக்ட்ரோனிக் போல்ட் லொக்கேட்டர்) யொன்று அளிப்பதற்கான கேள்விப் பத்திரங்கள்

தவறைக் குறிக்கும் மின்னணுப் பொறி யொன்று (Electronic Fault Locator) அளிப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 1 மத்திய தந்திக் கந்தோர்க் கட்டிடம் தெலிபோன் தந்திப் பிரதான இஞ்சினியரால் உற்பத்தியாளரிடமிருந்து அல்லது உற்பத்தியாளர்களின் அங்கீகாரம் பெற்ற விநியோகத்தர்களிடமிருந்து 1959 ம் ஆண்டு வைகாசி 26 ந் திகதி மு.ப. 9.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கொழும்பு 1, மத்திய தந்திக் கந்தோர் கட்டிடம், தெலிபோன் தந்திப் பிரதான இஞ்சினியரிடமிருந்து பெற்ற விண்ணப்பப் பத்திரங்களில் கேள்விப்பத்திரங்களை அனுப்புதல் வேண்டும். இவ்விடயம் பற்றிய முழு விபரங்களையும் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

3. கொழும்பு 1, மத்திய தந்திக் கந்தோர்க் கட்டிடம், மத்திய தந்திக் கந்தோர்க் கருமபீடக் காசாளரிடம் கேள்விப் பத்திரப் பொறுப்புப் பணமாக ரூ. 100 ஐக் கட்டி, அதன் பற்றுச் சீட்டைக் காட்டுபவர்களுக்கே விண்ணப்பப்பத்திரங்கள் வழங்கப்படும்.

4. கொழும்பு 1, மத்திய தந்திக் கந்தோர்க் கட்டிடம், தெலிபோன் தந்திப் பிரதான இஞ்சினியர் காரியாலயத்தில், கேள்விப்பத்திரச் சாசனங்கள் பார்வையிடுவதற்காகக் கிடைக்கும்.

5. 1959 ம் ஆண்டு வைகாசி 26 ந் திகதி மு. ப. 10 மணியளவில் கொழும்பு 1, மத்திய தந்திக் கந்தோர்க் கட்டிடம், தெலிபோன் தந்தி பிரதான இஞ்சினியர் காரியாலயத்தில், கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் பொழுது, கேள்விப்பத்திர விண்ணப்பதாரர் சமுகமளிக்கலாம்.

எச். ஈ. செனவிரத்ன,
தபாற் தந்தித் தலைமை அதிபதி.

பிரதம தபாற் கந்தோர்,
கொழும்பு 1,
1959 ம் ஆண்டு எப்ரில் மாதம் 21 ந உ.

---

## தபால் தந்திப் பகுதி

### ஆறு மோட்டார் வாகனங்களை அளிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள்

குறிப்பிட்ட நியமனங்களுக்கிணங்க ஆறு மோட்டார் வாகனங்களை அளிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள், கொழும்பு, செயலாளகர், தபால் ஒலிபரப்பு தகவல் அமைச்சின் கேள்விப் பத்திரச் சபைத் தலைவரால் 1959 ஆண்டு வைகாசி மீ 26 ந் திகதி மு.ப. 9.30 மணிவரை மோட்டார் வியாபாரிகளிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்படும்.

2. தந்திப் போக்குவரத்துப் பிரதான இஞ்சினியரிடமிருந்து பெற்ற பத்திரங்களில் இரட்டைப் பிரதிகளில் கேள்விப் பத்திரங்களை அனுப்ப வேண்டும். இக்கேள்விப் பத்திரங்களைப்பற்றிய முழு விபரங்களை அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். கொழும்பு மத்திய தந்திக் கத்தோர்த் தந்திக் காசாளரிடம் 100 ரூபா கேள்விப் பத்திரப் பிணைப்பணமாகக் கட்டி, அதன் பற்றுச்சீட்டைக் காட்டுபவர்களுக்கே கேள்விப்பத்திர விண்ணப்பப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. கேள்விப்பத்திர விண்ணப்பப்பத்திரங்கள் 1959 ஆண்டு வைகாசி மீ 25 திகதி நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும்.

4. பொறுப்புப் பணம் கேள்விப்பத்திரப் பெறுமதியின் நூற்றுக்கு ஐந்து வீதமாகும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர் ஒப்பந்தத்தை ஏற்கும்பொழுது பிணைப்பத்திரத்தில் ஒட்டும் முத்திரைகட்கு, முத்திரை விதிகளின் கீழ் கட்டுப்பட்டவராவர்.

5. 1959 ஆண்டு வைகாசிமீ 26 ந் திகதி மு.ப. 10 மணியளவில் தபால் ஒலிபரப்பு தகவல் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியின் காரியாலயத்தில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்விப்பத்திர விண்ணப்பதாரர் சமுகமளிக்கலாம்.

எச். ஈ. செனவிரத்ன,
தபாற் கந்தோர்த் தலைமை அதிபதி.

பிரதம தபாற் கந்தோர், கொழும்பு,
1959 ம் ஆண்டு எப்பிரில் மாதம் 21 ந உ.

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### 45 கலன் வெற்றுப் பீப்பாக்கள், கழிவு எண்ணெய் முதலியன

200, கிருள வீதி, நாரகேன்பிட்டி என்னும் விலாசத்தில் உள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப் பத்திரச் சபைத் தலைவர் 1959 ம் ஆண்டு மே மாதம் 6 ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிவரை, பின்வருவனவற்றிற்காக, முத்திரை இடப்பட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

| | | |
|---|---|---|
| (1) | வெற்று 45 கலன் பீப்பாக்கள் .. | 500 |
| (2) | 45 கலன் பீப்பாக்களில் உள்ள கழிவு எண்ணெய்கள் | 135 |
| (3) | வெற்று கொழுப்பு சிறுபீப்பாக்கள் .. | 105 |

1வது புள்ளி விபரத்துக்கு ரூபா 250.00உம், 2வது புள்ளி விபரத்துக்கு ரூபா 100.00உம், 3வது புள்ளி விபரத்துக்கு ரூபா 50.00உம் கட்டுப் பணமாக இருக்கும். பொரலஸ்கமுவ, வெரகரையில் உள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதம வினியோக உத்தியோகத்தரிடம் கட்டுப் பணத்தைக் கட்டி, அதற்காகப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இக்கேள்விப் பத்திரத்துடன் இணைக்க வேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையில் "45 கலன் வெற்றுப் பீப்பாக்கள், கழிவு எண்ணெய் முதலியவற்றிற்கான கேள்விப் பத்திரம்" என்று தெளிவாகக் குறிக்கப்படுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் கேள்விப் பத்திரகாரர் முழுத் தொகையையும் கட்டி 5 நாட்களுக்குள் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும். இப்புள்ளி விபரங்களிலுள்ள, பொருட்களை பொரலஸ்கமுவ, வெரகரையில்உள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபை வினியோகப் பகுதிக் கட்டடங்களில் பார்வையிட்டுக் கொள்ளலாம்.

செயலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

1959 ம் ஆண்டு எப்ரல் மீ 18 ந உ.

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### சேவைக்குதவாத றையர்களும் பற்றறிகளும்

200, கிருள வீதி, நாரகேன்பிட்டி என்னும் விலாசத்தில் உள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப் பத்திரச் சபைத் தலைவர் 1959 ம் ஆண்டு மே மாதம் 6 ந் திகதி புதன்கிழமை. மு. ப. 10 மணிவரை, பின்வருவனவற்றிற்காக முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

1. 2100 சேவைக்குதவாத றையர்கள்: அளவுகள், 700 × 20, 750 × 20 825 × 20, 900 × 20.

இவைகளை 300 கொண்ட பாகங்களாக விற்கப்படும். ஒவ்வொரு பாகமும் இலக்கமிடப்படும். கேள்விப்பத்திரகாரர் பாக இலக்கத்தை தங்கள் கேள்விப் பத்திரங்களில் காட்ட வேண்டும். ஒவ்வொரு பாகத்திற்கும் முற்பணமாக ரூபா 100 கட்ட வேண்டும்.

2. சேவைக்குதவாத பற்றறிகள்.
 6 வோல்ற் 488
 12 வோல்ற் 181

பற்றறிகள் எல்லாவற்றிற்கும் கட்ட வேண்டிய முற்பணம் ரூபா 259.

றையர்களுக்கும் பற்றறிகளுக்குமான முற்பணங்களை பொறலஸ்கமுவ வெரகரையிலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதான வினியோக உத்தியோகத்தரிடம் கட்டிப் பற்றுச்சீட்டைக் கேள்விப் பத்திரத்தோடு இணைக்க வேண்டும். கடித உறையில் இடது மேல் மூலையில் " சேவைக்குதவாத றையர்களுக்கும் பற்றறிகளுக்கும் கேள்விப் பத்திரம் " என்று தெளிவாக குறிக்கப்படுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் கேள்விப் பத்திரகாரர் முழுத் தொகையையும் கட்டி 5 நாட்களுக்குள் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும். இப்பொருட்களை பொரலஸ்கமுவ, வெரகரையில் உள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபை விநியோகப் பகுதி கட்டடங்களில் பார்வையிட்டுக் கொள்ளலாம்.

செயலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

1959 ம் ௵ எப்ரல் ௴ 18 ந் ௳.

## மதுவரி இலாகா

### 1.9.59 தொடக்கம் 31.8.62 வரை ஒவ்வொருவருடமும் அடைப்பதற்கு களவுத்தடையும் கபடத்தடையுமுடைய 52,000 குறேஸ் அடைப்பு மூடிகளையும், 12 மூடியடைக்கும் யந்திரங்களையும் வழங்குவதற்கு கேள்விப்பத்திரங்கள்

1.9.59 தொடக்கம் 31.8.62 வரை ஒவ்வொருவருடமும் போத்தல்களில் சாராயம் அடைப்பதற்கு களவுத்தடையும் கபடத்தடையுமுடைய 52,000 குறேஸ் அடைப்புமூடிகளையும் 12 மூடியடைக்கும் இயந்திரங்களையும் மதுவரி இலாகாவுக்கு வழங்குவதற்கு உற்பத்தியாளர் வணிகத்துறையாளர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்களை உள் நாட்டு விவகார அமைச்சு கேள்விப்பத்திர சபைத் தலைவர் 1959 ம் ஆண்டு ஆனி மாதம் 15 ந் திகதி திங்கட்கிழமை மு. ப. 10.30 வரை ஏற்றுக்கொள்ளுவார்.

2. மதுவரி அதிகாரி தபால் பெட்டி இலக்கம் 754, மக்லம் றோட், கொழும்பு 10 லிருந்து அல்லது வெளிநாட்டு இலங்கைப் பிரதிநிதிகளிடமிருந்து பெறக்கூடிய கேள்விப்பத்திரங்களிலேயே விண்ணப்பம் இரட்டைப் பிரதியில் அனுப்பப்படவேண்டும். அவர்களிடமிருந்து முழு விபரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

3. உள்நாட்டு விண்ணப்பக்காரர் மதுவரி அதிகாரியின் கந்தோரில் கட்டப்படவேண்டிய ரூபா 100 கட்டணத்திற்குப் பற்றுச்சீட்டைக் காட்டி 1959 ம் ஆண்டு ஆனி மாதம் 12 ந் திகதி நண்பகல் 12.00 மணிவரை கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

டி. பி. வடுகொடபிற்றியா,
மதுவரி அதிகாரி.

மதுவரி அதிகாரியின் கந்தோர்,
தபால் பெட்டி இல. 754,
மக்கலம் றோட், கொழும்பு 10,
1959 ம் ௵ சித்திரை ௴ 22 ந் ௳.

## விளம்பரம்

1959 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 1 ந் திகதி வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறையாக விருப்பதால், இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை 1959 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 30 ந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படுமெனவும், அப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1959 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 27 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமெனவும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு.
1959 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 9 ந் திகதி.

பேர்ணுட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.


இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.